2012 ஏப்ரல் 26]   [திரு. சு. குணசேகரன்]

ஒரு இன்னோவா காருக்கு அதனுடைய மொத்த அடக்கத்திலிருந்து 10 சதவீதம் என்ற அடிப்படையில் 8,500 ரூபாய் என்று இருந்ததை, 1,80,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல் டூரிஸ்ட் வேன்களுக்கு 9 ஆண்டுகளுக்குதான் பர்மிட் கொடுக்கிறார்கள். ஆனால், 15 ஆண்டுகளுக்கு வரிவிதிக்கப்படுகிறது. இதனால் வாகன ஓட்டுனர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுவதாகச் சொல்லி, இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வரட்டும். அதை எடுப்பது பற்றி பதில் வந்த பிறகு* consider *செய்யலாம்.*

(உ) சூறாவளிக் காற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அண்மையில் வீசிய சூறைக் காற்றினால் வீடுகள், தென்னை மற்றும் வாழை மரங்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

***திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில், 24–4–2012 அன்று அவினாசி பகுதியில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கருப்பசாமி, நீங்கள் உட்காருங்கள். திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, நீங்கள் பேசுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாத மலர்களை வணங்குகிறேன்.*

பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில், கடந்த 20–4–2012 அன்று கனமழையுடன் சூறாவளிக் காற்றும் வீசி, சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள்-காவளிபாளையம்,

ஜலத்தூர் போன்ற கிராமங்களில், குறுகிய காலத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான வாழை மரங்களும், நூற்றுக்கணக்கான தென்னை மரங்களும் சாய்ந்தும், முறிந்தும் சேதம் ஏற்பட்டுள்ளது. இது தவிர சில விவசாயிகளின் குடியிருப்பு வீடுகளும், மாட்டுக் கொட்டகைகளும் காற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளன. இதனைக் கேள்விப்பட்டவுடன் கடந்த 21–4–2012 ஆம் நாள் நானும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *அவை நெஞ்சை உலுக்கும் நிகழ்வுகளாக இருக்கின்றன. இதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நஷ்ட ஈடு வழங்குமா என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, என்ன சொல்ல வருகிறீர்கள்?*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில், 24–4–2012 அன்று அவினாசி மற்றும் அன்னூர் பகுதியில் சூறாவளிக் காற்றினாலே அந்தப் பகுதியில் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த வாழை மரங்கள் சேதம் அடைந்துள்ளன. மொத்தம் 90,760 வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன. இதனால் 147 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கவேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் நேற்றைய முன்தினம் எதிர்பாராமல் ஏற்பட்ட சூறாவளிக் காற்றுடன்கூடிய மழையால் அங்கு விவசாய விளைபொருள்கள்*

2012 ஏப்ரல் 26] [திரு. ஓ. கே. சின்னராஜ்]

பெருமளவிற்குச் சேதம் அடைந்திருக்கின்றன. குறிப்பாக, அறுவடைத் தருணத்தில் இருக்கின்ற வாழை மரங்கள் அனைத்தும் வேருடன் சாய்ந்து, விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இது விவசாயிகள் மத்தியில் இன்று பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, அதைத் தணிக்கின்ற வகையில் விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்குவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய ஆனைமலை ஒன்றியம், மடத்துக்குளம் பேரூராட்சியில், அதனுடைய சுற்றுப்புறப் பகுதிகளில் கடந்த 20–4–2012 ஆம் நாள் ஏற்பட்ட கடுமையான சூறாவளிக் காற்றினால் ஜே.ஜே. நகர் பகுதியில் குடியிருக்கக்கூடிய மக்களுடைய வீடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இரும்புக் கம்பிகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. வீடுகளின் ஓடுகள் சேதம் அடைந்துள்ளன. இரண்டு ஏக்கர் வாழை மரங்கள் முழுவதும் நாசம் அடைந்துள்ளன. இரண்டாயிரம் தென்னை மரங்கள் முழுமையாக முறிந்து கீழே விழுந்துள்ளன. இதற்கான இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடிய முறையில் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம், உங்கள் தொகுதியில் பாதிப்பு இருக்கிறதா? அவர் சொல்லிவிட்டார், இல்லையா? அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 20–4–2012 அன்று, கடலூர் மாவட்டத்தில் அடித்ததுபோல, ஒரு பயங்கரமான சூறாவளிக் காற்று அடித்து, ஏராளமான வாழை மரங்கள், தென்னை மரங்கள் மற்றும் வீடுகள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளுக்கான இழப்பீடுகள் நேற்றைய தினமே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்ததாகச் சொன்னார்கள். அங்கே*

இருந்து எனக்கு அறிவிப்பு வந்தது. அதற்கு உடனடியாக முயற்சி எடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள், ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகள் அனைவருக்கும் உடனடியாக நிவாரண உதவிகளை அரசு வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்கள் தொகுதியில் பாதிப்பு இருந்தால் பேசலாம்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக விளவங்கோடு, வெள்ளாங்கோடு, அருமனை போன்ற அனைத்துப் பேரூராட்சிகளிலும் பெருவாரியான வாழை, தென்னை, இரப்பர் போன்ற அனைத்து மரங்களும் சேதமடைந்துள்ளன. மேலும் வீடுகளின் கூரைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைய தினமே இதற்கான நிவாரணப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு வட்டாட்சியர் அவர்களும் அதைப் பற்றிய தகவலைக் கொடுத்தார். அந்த வகையில் பணிகளைத் தொடங்கியமைக்கு அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்து, தொடர்ந்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எனது தொகுதியில் சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான இரப்பர் மரங்கள் சேதமடைந்திருக்கின்றன. சுமார் 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

2012 ஏப்ரல் 26]

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தின்போது விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டங்களை அரசு வழங்குகின்றபோது, அது எந்த வகையிலும் விவசாயிகளுக்கு உபயோகம் இல்லாமல் போகிறது. குறிப்பாக, வாழை மரங்கள் எல்லாம் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்றபோது அரசாங்கம் மூன்று ரூபாய்தான் ஒரு மரத்திற்குத் தருகிறது. அது எந்த வகையில் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து முடிக்கிறேன். வணக்கம்.

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் தேதி நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எப்போதும் ஆலங்கட்டி மழையிலேயே இருக்கிறீர்கள். உட்காருங்கள். அதை நீங்கள் தனியாகக் கொடுத்திருக்கிறீர்கள். இப்போது சூறாவளி குறித்துதான் அமைச்சர் பதிலுரை வைத்திருக்கின்றார். ஆலங்கட்டி மழை பற்றி தனியாக எடுத்துக்கொள்வோம், உட்காருங்கள்.

(உ) சூறாவளிக் காற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியத்தில் சமீபத்தில் அடித்த காற்றினால் அறுவடைக்குத் தயாரான 1,25,000–க்குமேல் வாழை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 ஏப்ரல் 26

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே பல பகுதிகளிலே வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. காய்கறிகள், கொய் மலர், தேயிலை போன்ற அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பயிர்களின் இரண்டு அடிக்கு மேலே பனி மூடியிருக்கிறது. அதை அப்புறப்படுத்துவதற்கே பெரும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து, இதன்மீது உரிய ஆய்வு செய்து நிவாரணம் வழங்குவதற்கு முன்வருவாரா என்று கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.*

திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான உதகை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஹுல்லத்தி, கடநாடு, எப்பாநாடு போன்ற வருவாய்க் கிராமங்களில் கடந்த மாதம் பெய்த ஆலங்கட்டி மழையில் சுமார் 500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த தேயிலைச் செடிகளும், 600 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கேரட், பீட்ரூட், முட்டைகோஸ் போன்ற விவசாயப் பயிர்களும் கடுமையாக சேதமடைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு அந்தப் பகுதியிலே விவசாயமே செய்ய முடியாத அளவிலே மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். விவசாயத்தையே நம்பி வாழும் அப்பகுதி மக்களுக்கு அரசு ஏதாவது நிவாரணம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(உ) சூறாவளிக் காற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 26]

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், பசி நோக்காது, சதா சர்வகாலமும் தமிழக மக்களின் நலன் ஒன்றையே சிந்தித்துக் கொண்டிருக்கும் ஈடு இணையற்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற நிலைமைகளை மனதிலே வைத்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் இதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன், இதை ஏற்று, விரைந்து அந்தப் பணிகளை ஆற்ற வேண்டுமென்று நேற்றைய தினம் வருவாய்த் துறைக்குப் பணித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, ஏ.ஏ. கருப்பசாமி, ஓ.கே. சின்னராஜ், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக எம். ஆறுமுகம், பி.எல். சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எஸ். ஜாண் ஜேக்கப், என்.ஆர். ரெங்கராஜன், திருமதி எஸ். விஜயதரணி, ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் ம. கலை அரசு, புத்திசந்திரன், க. பாலகிருஷ்ணன் போன்றவர்கள், தங்களுடைய பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற நிலை குறித்து இங்கே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: திரு. ஆ. நாராயணன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற இந்த இயற்கைச் சீற்றங்களை மனதிலே கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில், 24-4-2012 அன்று மழை மற்றும் சூறைக்காற்றினால் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை ஒன்றியம், உடையாகுளம் கிராமத்தில், ஜே.ஜே. நகர் என்ற இடத்தில் 33 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்காக, முழுமையாக சேதமடைந்த ஒரு வீட்டிற்கு 5,000 ரூபாயும், பகுதியாக சேதமடைந்த 32 வீடுகளுக்கு தலா 2,500 ரூபாய் என்ற முறையில் ஏறத்தாழ 85,000 ரூபாய் வழங்கி நேற்றையதினமே அவர்களுக்கு உரிய நிவாரணப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆற்றியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 ஏப்ரல் 26

அதைப்போல, பொள்ளாச்சி வட்டத்தில் இருக்கிற 14 கிராமங்களில் தென்னை மரங்கள் 2.70 எக்டேர் பரப்பளவிலும், வாழை மரங்கள் 8.56 எக்டேர் பரப்பளவிலும், இதர பயிர்கள் 0.7 ஏக்கர் பரப்பளவிலும் சேதமடைந்துள்ளன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறைக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையிலும், சேதமடைந்திருக்கிற வாழைப் பயிர்கள் எக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாயும், தென்னை எக்டேர் ஒன்றுக்கு 9,000 ரூபாயும் வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறையின் சார்பாக ஆய்வு நடைபெற்றிருக்கிறது. விரைந்து அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மேட்டுப்பாளையம், அவினாசி போன்ற பகுதிகளிலே இந்தக் காற்றின் மூலமாக வாழை மரங்கள் சேதமடைந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதற்கும் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளேயே அவர்களுக்கு அந்த உரிய நிவாரணத் தொகைகள் வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற விளவங்கோடு வட்டத்தில் 92 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. 5 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்திருக்கின்றன. ஆகவே, 5 வீடுகளுக்கும் தலா ரூ.5,000/– என்ற முறையில் 25,000 ரூபாயும் மற்றும் பகுதியாகச் சேதமடைந்த 92 வீடுகளுக்கு வீடு ஒன்றுக்கு ரூ.2,500/– என்ற முறையிலும் 2,30,000 ரூபாயும் நேற்றையதினமே அங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழையைப் பொறுத்தவரையிலும், 25 எக்டேர் நிலத்திலே வாழைப் பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குரிய தொகை விரைந்து, மூன்று நாட்களுக்குள்ளேயே உரிய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு—எக்டேர் ஒன்றிற்கு 7,100 ரூபாய் என்ற முறையில் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தென்னை மரங்களைப் பொறுத்தவரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 29 தென்னை மரங்களுக்குத்தான் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கும் உரிய நிவாரணத் தொகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு. புத்திசந்திரன் அவர்களும் மார்ச் மாதம் பெய்த ஆலங்கட்டி மழையினால் ஏற்பட்ட சேதத்தினைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உரையாற்றுகிறபோது இப்போதுதான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்களை நான் பெற்று, அவர்களுக்கும் விரைந்து அந்தத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

“இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லை என்று சொல்லுவதில்லை” என்பதைப்போல இறைவனாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனைத்து நிவாரணப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று எந்தெந்தப் பகுதிகளிலே சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்களேயானால், ஒரு வார காலத்திற்குள்ளாகவே விரைந்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) போக்குவரத்து வாகனங்களுக்கு ஒரே சீரான வரி விதிப்பு முறையை அமல்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையை அளிப்பார்கள்.